பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 03 செவ்வாய்க்கிழமை 16.03.2021 கதிர் 362

## இலங்கையில் 7,84,500 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றல்!

இலங்கையில் 7 லட்சத்து 84 ஆயிரத்து 500 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதம் 29ஆம் திகதி முதல் நேற்று வரை இந்தத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

2

### தலைமன்னாரில் கோர விபத்து

# பஸ்ஸுடன் மோதியது ரயில்; பாடசாலை மாணவன் சாவு!

### 23 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்







(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டம், தலைமன்னாரில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸுடன் ரயில் மோதி ஏற்பட்ட கோர விபத்தில் மாணவன் ஒருவன் பலியாகியுள்ளார். அத்துடன் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 23 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இன்று பிற்பகல் 2.10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதைத் தொடர்ந்து 24 பேர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் 14 வயதையுடைய பாலச்சந்திரன் தருண் என்னும் மாணவனே பலியாகியுள்ளார். ஏனைய 23 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

2

## விபத்தால் குருதித் தட்டுப்பாடு; அவசரமாக உதவக் கோரிக்கை



(ந.லோகதயாளன்)

தலைமன்னார் பஸ் - ரயில் விபத்தைத் தொடர்ந்து மன்னார் பொது வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட அரச அதிபர் திருமதி ஏ.ஸ்டான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

எனவே, படுகாயமடைந்தவர்களுக்கு மன்னார் பொது வைத்தியசாலையில் குருதி வழங்கி உதவுமாறு அவர் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கைக்கு பிரிட்டன் நம்பிக்கைத் துரோகம்!

### கதறுகின்றது கோட்டா அரசு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான புதிய பிரேரணைக்குப் பிரிட்டன் தலைமை தாங்குவது நட்புறவற்ற செயலாகும். இது நம்பிக்கைத் துரோகமாகும்.

- இவ்வாறு சாடினார் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன.

ஐ.நா. மனித உரிமைகள் சபைகளில் இலங்கை மீதான புதுப்பிக்கப்பட்ட பிரேரணை வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் ஊடகங்களிடம் வெளிவிவகார அமைச்சர் கருத்துத்

2

# கடத்தல்கள், படுகொலைகள் ஆதாரங்கள் என் வசம் உண்டு

### கண்டியைச் சேர்ந்த சிங்கள நபர் யாழில் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

கண்டியைச் சேர்ந்த டீமன் ஆனந்த என்ற சிங்கள நபர் யாழ்ப்பாணம், சுப்பிரமணியம் பூங்கா முன்றிலில் இன்று முதல் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கும், கடத்திப் படுகொலை செய்யப்பட்டோருக்கும் என்ன நடந்தது? என இந்த அரசு வெளிப்படுத்த வேண்டும் எனவும், யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட

2



## ரிஷாத் பற்றி பேச விமலுக்குத் தடை



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பிக்கு எதிராக அவதூறான கருத்துக்களைத் தெரிவிக்க அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் அருண அளுத்கே

2

# சர்வதேசத்திடம் நீதியை எதிர்பார்ப்பது நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயலாம்

### பேராயரின் கருத்துக்கு அரசு இப்படிப் பதில்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாகவே இயங்குகின்றது. இங்கு என்ன பிரச்சினைகள் இடம்பெற்றாலும் அதற்கு உள்நாட்டு நீதித்துறை நீதியை வழங்கியே தீரும். அதைவிடுத்து சர்வதேசத்திடம் பேராயர் நீதியை எதிர்பார்ப்பது நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானதாகும்.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நீதியைப் பெற்றுத் தருவோம் என்று நாட்டு மக்களுக்கு

2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## கடத்தல்கள், படுகொலைகள் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகள் தொடர்பில் இந்த அரசு பொறுப்புக் கூறவேண்டும் எனவும் வலியுறுத்தி இந்தப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது இலங்கையில் குறிப்பாக வடக்கில் பல இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இந்த அரசு உண்மையை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடத்தல்கள், படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் என்னிடம் பல ஆதாரங்கள் உள்ளன. அந்த ஆதாரங்களை ஜெனிவாவிலும் சமர்ப்பிக்கவுள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

படுகொலைகள் மற்றும் கடத்தல்களில் ஈடுபட்டவர்கள் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், மாகாண சபை உறுப்பினர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்களைக் கண்டறிந்து அவர்களைக் கைது செய்ய வேண்டும். அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கும் நீதி வேண்டும். எனினும், நான் தமிழ் மக்களுக்கு எதிராக இந்தப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் உண்மை விடயம் தொடர்பில் சரியான தெளிவுபடுத்தல் வேண்டும் என்பதற்காகவே நான் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன். இந்தப் போராட்டம் தமிழ் மக்களுக்கு எதிரான போராட்டம் என நினைக்காதீர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரிஷாத் பற்றி பேச .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதைத் தடுக்கும் வகையில், மூன்று தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் நீதிவான் இன்று இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் பிரதிவாதிகளுக்கு நீதிவான் அருண அளுத்கே உத்தரவிட்டுள்ளார்.

ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்துள்ள மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டத்தரணி ருஸ்ஜி அபீப் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த நீதிவான், எதிர்வரும் 30ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் வகையில் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ கடந்த 9ஆம் திகதி ஆற்றிய உரையின் மூலம் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தே ரிஷாத் பதியுதீன் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

அவ்வாறான பொய்யான கருத்துக்களை வெளயிட்டமை மற்றும் தமது பெயருக்குக் களங்கம் விளைவித்தமை தொடர்பில் 10 கோடி ரூபா நட்டஈட்டை பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுத்தருமாறும் ரிஷாத் பதியுதீன் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சர்வதேசத்திடம் நீதியை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு உறுதியளித்திருந்தது. எனவே, அரசியல் நலன் கருதி குற்றவாளிகளைப் பாதுகாக்கும் விதத்தில் அரசு செயற்பட்டால் நாம் சர்வதேச நீதிமன்றத்தின் உதவியை நாட நேரிடும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்' என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்த கருத்துக்கு அமைச்சர் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில்தான் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடைபெற்றது. உலக பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ். அமைப்பின் இஸ்லாமிய அரசு அமைக்கும் நோக்குடனேயே இலங்கையிலும் உயிர்த்த ஞாயிறு தினத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த ஆட்சியில் தேசியப் பாதுகாப்பு பலவீனமாக இருந்த காரணத்தாலேயே இங்கு தாக்குதலை சஹ்ரான் குழுவினர் இலகுவாக நடத்தினர்.

எமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் தேசியப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மறைந்திருந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்டவர்களைக் கைதுசெய்தோம்.

எனவே, இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தண்டனையை நிச்சயம் வழங்குவோம். பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கு நீதி கிடைத்தே தீரும்.

இதைவிடுத்து சர்வதேசத்திடம் பேராயர் நீதியை எதிர்பார்ப்பது நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானதாகும் - என்றார்.

## இலங்கைக்கு பிரிட்டன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைமீதுமுன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை நாட்டின் இறையாண்மையை மீறுவதாகும்.

இவ்வாறானதொரு பிரேரணைக்குப் பிரிட்டன் தலைமை தாங்குவது, ஒரு பொதுநலவாய உறுப்பினரான இலங்கை மீது பிரிட்டனின் நட்புறவற்ற செயலாகும்.

இது பிரிட்டன், இலங்கைக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகமாகும்.

இலங்கையைத்திட்டமிட்டவகையில் பிரிட்டன் தலைமையிலான சில நாடுகள் பழிவாங்குகின்றன - என்றார்.

## பஸ்ஸுடன் மோதியது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, படுகாயம் அடைந்தவர்களில் ஆசிரியர் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தலைமன்னார் - பியர் பகுதியிலுள்ள ரயில் கடவையைக் கடந்து பணித்த பஸ்ஸின் பின் பகுதியிலேயே ரயில் மோதியுள்ளது. குறித்த பகுதிக் கடவை பாதுகாப்பற்ற கடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலையில் வெள்ளியன்று இரத்த தானம்!

*யாழ்ப்பாணம், மார்ச் 16*

*யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்படும் மாபெரும் இரத்த தான நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, காலை 10 மணிக்கு, மாணவர் நலன்புரிக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.*

*உயிர் காக்கும் உன்னத பணியில் சமூக ஆர்வலர்களை இணைந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.*

**ஒடியல் மா தேவை**

ஒடியல் மா மொத்தமாக கொள்வனவிற்கு தேவை.

தொடர்புகளுக்கு 076 403 814

**பனங்கிழங்கு தேவை**

பனங்கிழங்கு மொத்த கொள்வனவுக்கு தேவை.

தொடர்புகளுக்கு 076 011 7002

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**

1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.

தொடர்புகளுக்கு 021 492 7778

**இஞ்சி கன்று விற்பனைக்கு**

தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு 021 492 7778

**விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622**

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# மீண்டும் இருண்ட யுக ஆட்சி?

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 2015 முதல் 2019 வரையான நான்கரை வருட கால ஆட்சி குறித்து என்ன குறை, குற்றம் கூறினாலும், அந்த ஆட்சி முறைமை தொடர்பான ஓர் உண்மையை மறக்க – மறைக்க – மறுக்க – முடியாது.**

**அது – இலங்கையின் கடந்த கால் நூற்றாண்டு காலச் சரித்திரத்தில் அரச படைகள் மற்றும் பொலிஸாரின் அட்டூழியங்கள் மிக மிகக் குறைவாக இருந்த 'பொற்காலம்' அது தான்.**

**அந்த ஆட்சிக் காலத்திலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அராஜகங்கள் இடம்பெற்றன என்றாலும், அவை எவையும் ஆட்சித் தலைமையின் மறைமுக ஆசீர்வாதம், அனுமதியுடன் நடந்தன என்று கூறுவதற்கு இருக்கவில்லை.**

**யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் நிகழ்வுக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழியில் கறுப்புக் கொடி காட்டி, ஆர்ப்பாட்டம் நடத்திய சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் போன்றோரை, தமது வாகன அணியை இடைநிறுத்தி, இறங்கிச் சென்று சந்தித்தவர். அவ்வளவு தூரம் 'ஸிம்பிள்' ஆக ஆட்சியைக் கொண்டு நடத்தியவர் என்பது விதந்துரைக்கப்பட்டு மெச்சத்தக்கதே.**

**அவருக்கு முன்பிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாஸா, சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ, இப்போது இருக்கின்ற கோட்டாபய ராஜபக்ஷ என்று எந்த ஜனாதிபதியும் மைத்திரிபால சிறிசேன போல எளிமையாகவும் கெடுபிடி பண்ணாமலும் இருக்கவில்லை. ஆட்சி அதிகாரத்தின் வலிமையை தீவிரமாக மக்கள் மீது காட்டும் பண்பியல்பு அவரிடம் இருக்கவே இருக்கவில்லை. அந்த அமைதியின் நிழலை தமிழர்கள் உட்பட இலங்கைத் தீவின் மக்கள் எல்லோரும் நன்கு அனுபவித்தனர் என்பது மறுக்கக் கூடியதல்ல.**

**இப்போது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியதான இக்கட்டு நிலைமை. என்ன செய்வது என்று தெரியாமல் மக்கள் – குறிப்பாக இந்தத் தீவின் தமிழ் பேசும் மக்கள் – கலவரப்படும் அவல நிலைமை.**

**2005 – 2014 ஆண்டுகளில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலும் பின்னரும் இலங்கை மக்களும் ஊடகங்களும் மிகக் கொடூரமான – இரக்கமேயற்ற – ஓர் ஆட்சிப் பீடத்தைக் கண்டு கலங்கிப் போயினர்.**

**அந்த இருண்ட யுக காலத்தில் இலங்கை மக்கள் எதிர்கொண்ட அராஜகங்கள், அட்டூழியங்கள், அடாவடிகள் மீள நினைத்துக் கூடப் பார்ப்பதற்கு அச்சம் தருவன.**

**அந்த இருண்ட யுகம் மீண்டும் வந்து விட்டதோ என்று மக்கள் அஞ்சுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.**

**மீண்டும் கடத்தல் சம்பவங்கள் இடம்பெறுகின்றமைக்கு இந்த அரசாங்கம் அனுமதிக்கப் போகின்றதா என்று பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.**

**2015 ஆம் ஆண்டிற்கு முன்னரான யுகத்தை மீண்டும் நினைவுபடுத்தும் வகையில் கடந்த 10 ஆம் திகதி ஊடகவியலாளர் ஒருவர் தெற்கில் கடத்தப்பட்ட நிகழ்வை கோடி காட்டி, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தனது டுவிட்டரில் செய்தி வெளியிட்டிருக்கின்றார்.**

**கறுப்பு நிற வானில் வந்தவர்களினால் ஊடகவியலாளர் ஒருவர் தெற்கில் கடத்தப்பட்டிருக்கின்றார். அவரது செய்தி மூலங்கள் மற்றும் அரசியல் தொடர்புகள் பற்றிய தகவல்களைத் தெரிவிக்கும்படி சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் வீதியோரத்தில் அவர் தூக்கி வீசப்பட்டிருக்கின்றார்.**

**'ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே! மீண்டும் கடத்தல் சம்பவங்கள் தொடர்வதை நீங்கள் அனுமதிக்கப் போகின்றீர்களா?' என்று முன்னாள் சபாநாயகர் தமது டுவிட்டர் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.**

**எந்த விடயத்தையும் சட்ட ரீதியாக அணுக முடியாத நிலையில் இருக்கும் ஆட்சிப் பீடங்கள், மாற்று வழியாக இத்தகைய சட்டத்துக்கு முரணாக வகைகளை நாடுகின்றன.**

**சரியோ, பிழையோ இத்தகைய அராஜகங்கள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டியவை. இல்லையேல் அவை புற்று நோய் போலப் பரவி சமூகத்தில் எங்கும் அரங்கேறத் தொடங்கி விடும்.**

**இத்தகைய அராஜகங்கள், அட்டூழியங்களுக்கு ஆட்சிப் பீடத்தின் – அதிகாரத் தரப்பின் – மறைமுக ஆசீர்வாதம் இல்லாவிட்டால் –**

**இத்தகைய கொடூர சம்பவங்களுடன் ஆட்சிப் பீடத்தின் அளுபக்கரங்கள் நேரடியாகத் தொடர்புபடா விட்டால் –**

**இத்தகைய கடத்தல் கொடூரங்களின் சூத்திரதாரிகள் உடனடியாகக் கண்டு பிடிக்கப்பட்டு, அம்பலப்படுத்தப்பட்டு, உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். அது வரையில் இத்தகைய செயல்கள் ஆட்சிப் பீடத்தின் அராஜகமாகவே அடையாளப்படுத்தப்பட்டு, கருதப்படும் என்பதை அதிகாரத் தரப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

# சுதந்திரக் கட்சி – பெரமுன முரண்பாடுகளை தவிர்க்க இன்று கட்சித் தலைவர்கள் கூட்டம்!



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அரசாங்கத்தில் எவ்வித அநீதியும் இழைக்கப்படவில்லை. அரசாங்கம் தொடர்பில் சுதந்திர கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் அதிருப்தியடைந்துள்ளனர் எனக் குறிப்பிட்டுக் கொண்டு சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் அரசாங்கத்தில் ஒன்றினைந்து செயற்படுகிறார்கள்.

முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் குறிப்பிடப்படும் கருத்துக்களை முதலில் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இந்த விடயம் தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள கட்சித் தலைவர் கூட்டத்தில் விசேட அவதானம் செலுத்தப்படும் என காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

குருநாகலை பகுதியில் இடம்பெற்ற காணி உறுதிப்பத்திரம் பகிர்ந்தளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் ஸ்ரீ லங்கா சுதந்திரகட்சியும் பிரதான சகோதர கட்சியாக காணப்படுகிறது. மாறுபட்ட கொள்கையையுடைய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணியமைக்கையில் கருத்து வேறுபாடுகள் தோற்றம் பெறுகின்றமை இயல்பு. கட்சியின் உறுப்பினர்கள் முறையற்ற வகையில் செயற்படும் போது கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

அரசாங்கம் தொடர்பாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் அதிருப்தியடைந்துள்ளனர் எனக் குறிப்பிட்டுக் கொண்டு சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் அரசாங்கத்தில் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள். அரசாங்கத்தில் ஒரு தன்மையையும், கட்சியின் உறுப்பினர்களிடம் பிறிதொரு தன்மையையும் பேணுவது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சிக்கு எவ்வித அநீதியும் இழைக்கப்படவில்லை. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி அறிக்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன குறித்து முன்னெடுக்க வேண்டிய யோசனைகளை முன்வைத்துள்ளது. அறிக்கை வெளியானதன் பின்னரே சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் முரண்பாடான போக்கைக் கொண்டுள்ளார்கள். கூட்டணியிலான இணைப்பிற்கும், ஏப்ரல் 21 குண்டுத்தாக்குல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தனித்து போட்டியிடுகின்றனர் என அறிய முடிகிறது. இதுவரையில் எந்தத் தீர்மானங்களும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. கூட்டணியில் இணைந்து போட்டியிடுவதா அல்லது தனித்து போட்டியிடுவதா என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை சுதந்திரக் கட்சிக்கு உண்டு எடுக்கும் தீர்மானத்தை முரண்பாடற்ற வகையில் ஏற்றுக் கொள்வோம்.

ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன என்ற கூட்டணியின் ஊடாகவே ஜனாதிபதி தேர்தலிலும், பொதுதேர்தலிலும் மக்களாணையைப் பெற்றுக் கொண்டோம். அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் பெருமளவில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். ஒரு சில காரணிகளால் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை வலுவிழந்துள்ளது. ஆகவே, தவறுகளைத் திருத்திக் கொண்டு அரசாங்கம் சிறந்த முறையில் செயற்பட வேண்டும். ஆகவே, கூட்டணி பலமானதாக செயற்பட வேண்டும். கூட்டணியை பலப்படுத்துவது தொடர்பாக இன்று இடம்பெறவுள்ள் கட்சித் தலைவர் கூட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்படும். – என்றார்.

# பொலிஸார் தடுத்து வைத்துள்ள சந்தேகநபர் இஸ்லாமிய பயங்கரவாதக் குழுவுக்கு நிதியுதவி

## விசாரணையில் அம்பலம்

பொலிஸ் காவலில் தற்சமயம் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு சந்தேக நபர் இஸ்லாமிய பயங்கரவாதக் குழுவிற்கு நிதியளித்திருக்கின்றமை விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

பாணந்துறை பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் சில மாதங்களுக்கு முன்னர் பேலியகொட பொலிஸாரால் போதைப் பொருள் குற்றச்சாட்டுக்காக கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் தொடர்பான முதற்கட்ட விசாரணைகளின்போது ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு அதிகளவான பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

அதன் பின்னர் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது, சந்தேக நபர் இலங்கையில் இஸ்லாமிய பயங்கரவாத்தை ஊக்குவிக்கும் ஒரு குழுவுக்கு நிதியளித்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந் நிலையில் சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக டி.ஐ.டி. எனப்படும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

# ஜப்பானில் இலங்கைப் பெண் சாவு: விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன!

ஜப்பானின் நாகோயாவில் அமைந்துள்ள குடிவரவு தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 33 வயதான இலங்கைப் பெண்ணொருவர் மார்ச் 6 ஆம் திகதி உயிரிழந்துள்ளார் என டோக்கியோவில் உள்ள இலங்கைத் தூதுரகம் உறுதிசெய்துள்ளது.

அவரது விசா காலாவதியாகியமையால் கடந்த ஓகஸ்ட் முதல் அவர் தடுப்பு மையத்தில் இருந்தார் என்று தூதரக செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

இலங்கையின் கம்பஹாவைச் சேர்ந்த இவர் 2017 ஆம் ஆண்டு கல்வி நடவடிக்கைகளுக்காக ஜப்பானுக்கு சென்றிருந்தார். எனினும் விசா காலாவதியானமையால் அவர் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் குடிவரவு தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவருக்கு வழங்கப்பட்ட உணவு குறித்து அவர் தொடர்ந்தும் முறைப்பாடு அளித்தார் எனவும், அந்த உணவினால் அவர் பலவீனமடைந்தார் எனவும் கூறப்படுகிறது.

ஆறு சந்தர்ப்பங்களில் மருத்துவர்கள் அந்தப் பெண்ணை பரிசோதித்தனர் எனவும், குறைந்தபட்சம் அவர் இரண்டு முறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர் எனத் தூதரக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

எனினும் அவரது உயிரிழப்புக்கான உறுதியான காரணங்கள் இதுவரை கண்டறியப்படாத நிலையில், இது குறித்து நாங்கள் ஏற்கனவே ஜப்பானிய வெளியுறவு அமைச்சகத்துக்கு அறிவித்துள்ளதாகவும் தூதரக செய்தித் தொடர்பாளர் கூறினார்.

இந் நிலையில் இந்த விவகாரம் தொடர்பாகத் தனித்தனி பக்கச்சார்பற்ற விசாரணை நடத்துமாறு ஜப்பானிய நீதி அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# இந்தியர்களை புறக்கணித்துவிட்டு தடுப்பூசி ஏற்றுமதியில் இந்தியா ஈடுபடவில்லை என்கிறார் சுகாதார அமைச்சர்



இந்திய மக்களை புறக்கணித்துவிட்டு தடுப்பூசி ஏற்றுமதியில் மத்திய அரசு ஈடுபடவில்லை என சுகாதார அமைச்சர் ஹர்ஷ வர்தன் விளக்கம் அளித்துள்ளார்.

தடுப்பூசி போடும் திட்டம் ஆரம்பித்து 2 மாதங்கள் ஆகும் நிலையில், உள்ளூர் தடுப்பூசி திட்டத்திற்கு போதிய முன்னுரிமை அளிக்காமல், தடுப்பூசி அதிக அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக பொதுவான விமர்சனம் எழுந்தது.

இதற்கு மாநிலங்களவையில் பதிலளித்த ஹர்ஷ்வர்தன், நாட்டிற்கு எவ்வளவு தேவை, வெளிநாடுகளுக்கு எவ்வளவு ஏற்றுமதி செய்வது என்பது குறித்து அரசின் உயர்மட்ட நிபுணர் குழு கண்காணித்து வருவதாக கூறினார்.

கொவிஷீல்டு, கொவெக்சின் ஆகிய 2 தடுப்பூசிகளுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்ட பிறகு, பல நாடுகளுக்கு இலவசமாகவும், விலைக்கும் அவற்றை மத்திய அரசு அனுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 2 ஆயிரம் ரூபா நோட்டுக்கள் அச்சடிக்கப்படுவது நிறுத்தம்

## மத்திய அமைச்சர் தெரிவிப்பு

கணக்கில் காட்டப்படாத பணம் பதுக்கப்படுவதை தடுக்கும் நோக்கத்துடன் 500, 1,000 ரூபா நோட்டுக்கள் புழக்கத்தை கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துடன் மத்திய அரசு கைவிட்டது. அதன்பிறகு புதிய 500 ரூபா, நோட்டுகளை மத்திய அரசு அறிமுகம் செய்த போதும், 1,000 ரூபா நோட்டுகளை புதிதாக அறிமுகம் செய்யவில்லை.

அதற்கு பதிலாக புதிய 2000 ரூபா நோட்டை மத்திய அரசு அறிமுகம் செய்தது. ஆனால், கடந்த சில மாதங்களாக ரூ.2,000 நோட்டுகள் புழக்கம் வெகுவாக குறைந்து காணப்பட்டது.

இந்த நிலையில் இது தொடர்பாக மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய நிதித்துறை இணையமைச்சர் அனுராக் சிங் தாக்குர் அளித்த எழுத்துபூர்வ பதிலில் கூறியிருப்பதாவது:-

2018 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி நிலவரப்படி 336.2 கோடி ரூ.2,000 நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. இது மொத்த பணப் புழக்கத்தில் 3.27 சதவீதமாகவும், பண மதிப்பில் 37.26 சதவீதம் என்ற அளவிலும் இருந்தது.

2021 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் திகதி நிலைவரப்படி 249.9 கோடி ரூ.2000 நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. இது மொத்த பணப் புழக்கத்தில் 2.01 சதவீதமாகவும், பண மதிப்பில் 17.78 சதவீதம் என்ற அளவிலும் இருந்தது.

குறிப்பிட்ட மதிப்புடைய ரூபா நோட்டுகள் அச்சடிப்பு என்பது, பொதுமக்களின் பரிவர்த்தனை தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மத்திய அரசு ரிசர்வ் வங்கியுடன் ஆலோசித்து முடிவு செய்யும் விடயமாகும். அந்த வகையில், 2019 - 20 மற்றும் 2020.21 ஆம் ஆண்டுகளில் புதிய ரூ.2000 நோட்டுகள் அச்சடிப்பதற்கான உத்தரவுகள் எதுவும் அரசு அச்சகங்களுக்கு அளிக்கப்படவில்லை.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் புதிய 2,000 ரூபா நோட்டுகள் எதுவும் அச்சடிக்கப்படவில்லை.

கணக்கில் காட்டப்படாத கறுப்புப் பணம், உயர் மதிப்புடைய நோட்டுகளாகப் பதுக்கப்படுவதை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு அந்த பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “எனக்கே தெரியாம வேட்பாளராக அறிவித்துவிட்டார்கள்’ பா.ஜ.க. சார்பில் போட்டியிட மறுத்த ஓர் இளைஞர்



பாரதிய ஜனதாக் கட்சி சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் தேர்தலில் போட்டியிட மறுப்பு தெரிவித்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்திலுள்ள மானந்தவாடி தொகுதியில் பழங்குடியினர் மட்டுமே போட்டியிட முடியும். இந்த தொகுதியில் பாரதிய ஜனதாக் கட்சி வேட்பாளராக பனியா இனத்தை சேர்ந்த இளைஞர் மணிகண்டன் அறிவிக்கப்பட்டார். இத்தனைக்கும் பாரதிய ஜனதாக் கட்சியில் அடிப்படை உறுப்பினராக கூட மணிகண்டன் இல்லை. மணிகண்டன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் அது குறித்து உள்ளூர் பாரதிய ஜனதா கட்சித் தலைவர்கள் அவருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தொலைக்காட்சிகளிலும் அவரின் பெயர் வேட்பாளர் என்று செய்தி வெளியிடப்பட்டது.

ஆனால், மணிகண்டன் பாரதிய ஜனதாக் கட்சி சார்பில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்து விட்டார். தான் கட்சியிலேயே உறுப்பினராக இல்லாத போது தனக்கு சீட் கொடுத்தது ஆச்சரியமாக இருப்பதாகவும் தனக்கு எந்த காலத்திலும் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் இல்லையென்றும் மணிகண்டன் கூறியுள்ளார். மேலும், தனக்கு தன் வேலையும் குடும்பத்தினர் மட்டுமே முக்கியம் என்றும் மணிகண்டன் தெரிவித்து விட்டார்.

இதனால், தற்போது வேறு வேட்பாளரை தேடும் முயற்சியில் பாரதிய ஜனதாக் கட்சி இறங்கியுள்ளது. வயநாடு தொகுதியில் மானந்தவாடி, பத்தேரி, கல்பெட்டா தொகுதிகளில் பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே போட்டியிட முடியும். இதில், கல்பெட்டா தொகுதிக்கு மட்டுமே பாரதிய ஜனதாக் கட்சி வேட்பாளரை அறிவித்துள்ளது. மற்ற இரு தொகுதிகளிலும் வேட்பாளர் கிடைக்காமல் திண்டாடி வருகிறது. மணிகண்டன் பனியா இன மக்களின் முதல் பட்டதாரி ஆவார். எம்.பி.ஏ. படித்துள்ள இவர், கேரளா கால்நடை மற்றும் அறிவியல் விஞ்ஞான நிறுவனத்தில் பணி புரிந்து வருகிறார். இதனால், மணிகண்டனை பாரதிய ஜனதாக் கட்சி வேட்பாளராக தேர்வு செய்ததாக சொல்லப்படுகிறது. ஆனால், மணிகண்டன் தனது எண்ணோட்டத்துக்கு உகந்த கட்சியாக பாரதிய ஜனதா இல்லை என்று கருதுகிறார்.

# என்னைக் கொலை செய்துவிட்டு திரிணாமுல் காங்கிரஸை அழிக்க சதி

## மம்தா பகிரங்க குற்றச்சாட்டு



மேற்கு வங்காளம் தேர்தலில் பா.ஜனதா, மம்தாவின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றிற்கு இடையிலான போட்டி என்பதைவிட பனிப்போர் என்றே கூறலாம். இரண்டு கட்சிகளும் கடும் போட்டி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. வளர்ச்சித் திட்டங்களை முன்வைத்து தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வதைவிட, கட்சி தலைவர்கள் மாறிமாறி பரஸ்பர குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசுகின்றனர்.

நந்திகிராம் தொகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்ட மம்தா பானர்ஜி தாக்கப்பட்டார். பா.ஜனதா கட்சியினரைச் சேர்ந்த வர்கள்தான் தாக்கினார்கள் என்று மம்தா பானர்ஜி குற்றம்சாட்டினார். மம்தா நாடகம் ஆடுகிறார் என பா.ஜனதா பதில்அளித்தது.

இந்த நிலையில் பங்குராவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய மம்தா பானர்ஜி “தற்போது வரை விவசாயிகள் கடந்த ஆறு மாதமாக டெல்லி எல்லையில் போராடிவருகின்றனர். அமைச்சர்கள் யாரும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அனைத்து அமைச்சர்களும் மேற்கு வங்காளத்தில் உள்ளனர். அவர்கள் இங்கு ஹோட்டல்களை பதிவு செய்து, என்னைக் கொலை செய்வதற்கும், திரிணாமுல் காங்கிரஸை அழிப்பதற்கும், தேர்தல் கமிஷன் உதவியுடன் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக எப்படி வழக்குப் பதிவு செய்யலாம் என சதி செய்து கொண்டிருக்கிறார்கள்” எனக் குற்றம்சாட்டினார்.

# இங்கிலாந்து பிரதமர் இந்தியா வருகிறார்



இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் கடந்த ஜனவரி மாதம் இந்தியா வந்து குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க திட்டமிடப்பட்டது.

ஆனால் இங்கிலாந்தில் கொரோனா நோய்த் தொற்று மீண்டும் வேகமாக பரவியதால் போரிஸ் ஜான்சன் இந்திய பயணத்தை ரத்து செய்தார். இந்த நிலையில் போரிஸ் ஜான்சன் அடுத்த மாதம் (ஏப்ரல்) இறுதியில் இந்தியாவுக்கு வரவுள்ளார்.

இதை அவரது அலுவலகமும் உறுதிப்படுத்தியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இங்கிலாந்து வெளியேறிய பிறகு போரிஸ் ஜான்சன் மேற்கொள்ளும் பெரிய சர்வதேச பயணம் இதுவாகும்.

இங்கிலாந்து தனது வர்த்தக தொடர்புகளை ஆசிய - பசுபிக் பிராந்தியத்துடன் விரிவுபடுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆஸ்திரேலியா, கனடா, சிலி, ஜப்பான், மெக்சிக்கோ, வியட்நாம் உள்ளிட்ட 11 பசிபிக் ரிம் நாடுகளை பிரதிநிதித்துவப்படும் டிரான்ஸ் – பசுபிக் கூட்டாண்மையில் சேர இங்கிலாந்து கடந்த மாதம் விருப்பம் தெரிவித்து அதற்கான முயற்சிகளை மேற்கொண் டது. மேலும் ஆசியான் கூட்டமைப்பில் ஆலோச கராக சேரவும் விண்ணப்பித்துள்ளது.

இங்கிலாந்து நாட்டின் பெருளாதார வளர்ச்சியை மேம்படுத்த போரிஸ் ஜான்சன் இந்தியா வர உள்ளார். இதில் இரு நாடுகளுக்கு இடையே வர்த்தகத்தை விரைவுபடுத்துவதற்கான பேச்சு நடக்கிறது.

இதனால் போரிஸ் ஜான்சனின் இந்திய சுற்றுப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## கொரோனாத் தொற்று அதிகரிப்பு

# குஜராத்தில் 4 பெரு நகரங்களில் இரவு நேர ஊடரங்கு அமுலுக்கு



அகமதாபாத், வடோதரா, சூரத் மற்றும் ராஜ்கோட் நகரங்களில் நாளை முதல் வரும் 31 ஆம் திகதி வரை இரவு நேர ஊடரங்கை அமுல்படுத்த குஜராத் அரசு முடிவு செய்துள்ளது.

குஜராத்தில் கொரோனா தொற்று தினசரி எண்ணிக்கை 900 ஐ நெருங்கி உள்ளது. அண்டை மாநிலமான மகாராஷ்டிராவில் 15 ஆயிரத்திற்கும் அதிகமாக தினசரி தொற்று பதிவாகி வருகிறது. எனவே வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் திட்டத்துடன், நள்ளிரவு 12 மணி முதல் காலை 6 மணி வரை 4 நகரங்களிலும் ஊரடங்கு பிறப்பிக் கப்படுவதாக குஜராத் மாநில அரசு அறிவித்துள்ளது.

DMI JAFFNA

A/L - 2K23

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

ஆரம்பம் :- மார்ச் 20 காலை 9 மணிக்கு

ஆரியகுளம் சந்திக்கு அருகாமை யாழ்ப்பாணம்

# மியன்மாரில் திங்களன்று மட்டும் 20 சிவிலியன்கள் கொலையுண்டனர்







மியன்மார் போராட்டத்தில் நேற்று மட்டும் 20 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சீனாவுடன் தொடர்புடைய தொழிற்சாலைகள் தாக்கப்பட்டதாக தெரிவித்து இராணுவத்தால் மிகவும் கொடூரமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமையால் ஆரம்பத்தில் 38 பேர் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்ட நிலையில் சீன நிதியுதவியுடன் யாங்கோனின் புறநகரில் இயங்கும் தொழிற்சாலைகளில் தீக்கிரையாக்கப்பட்ட பலர் உட்பட இறப்புகளின் எண்ணிக்கை 74 ஆக உயர்ந்துள்ளது.

பல்வேறு அடக்குமுறைகள் இருப்பினும் நேற்றைய தினம் மீண்டும் இராணுவத்துக்கெதிரான போராட்டங்கள் நடைபெற்றன. இதன்போது நேற்று மட்டும் 20 பேர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டதாக அரசியல் கைதிகளுக்கான உதவி சங்கத்தின் (AAPP) தெரிவித்துள்ளது.

ஆட்சிக் கவிழ்ப்புக்கு பின் மொத்தம் 183 பேர் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் மேலும் உயிரிழப்புகள் வெகுவாக அதிகரித்து வருவதாக AAPP தெரிவித்துள்ளது.

## சீனாவில் கடும் மஞ்சள் புயல்



சீனாவில் மார்ச், ஏப்ரல் மாத காலப்பகுதியில் புழுதிப்புயல் தாக்கம் ஏற்படுவது வழமையானது. இதன்போது மேற்குப் பகுதியிலிருக்கும் கோபி பாலைவனத்திலிருந்து கிழக்குத் திசை நோக்கி காற்று மணலை அள்ளிவரும். இந்தப் புயல் காற்றின் தாக்கம் வடக்கு ஜப்பான் வரை இருக்கும். இதே காலப் பகுதியில் மொங்கோலியாவில் இயற்கையாக ஏற்படும் காட்டுத் தீயின் பாதிப்பும் சீனாவின் புயல் காற்றோடு சேர்ந்து கொள்ளும்.

சீன மக்கள் இந்த இயற்கைச் சீற்றத்துக்குப் பழகியவர்கள்தான் என்றாலும் இம்முறை தாக்கிய புழுதிப்புயல் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகக் கடுமையானதாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால், பீஜிங் மற்றும் நாட்டின் வடக்குப் பகுதிகளில் கடுமையான காற்று மாசு ஏற்பட்டுள்ளது. அப்பகுதிகள் முழுவதும் மஞ்சள் நிறத்துக்கு மாறியுள்ளன. இதனால், அங்கு வீதிப்போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளதோடு நானூறுக்கும் மேற்பட்ட விமானங்களின் பறப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த புயல் முழுவதும் மணல் அடர்த்தியாக இருப்பதால் காற்று மஞ்சள் நிறத்தில் மாறியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் காற்றின் தர அட்டவணைப் பெறுமதி 500 என்ற மோசமான புள்ளியை எட்டியுள்ளது. இது சுவாசிப்பதற்கு ஏற்ற வளிமண்டலமாக இல்லையென்பதால் சீனாவில் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள தமது இருப்பிடங்களிலேயே இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பொதுவாக சீன வளிமண்டலத்தில் 35 மைக்ரோ கிராம் அளவுக்கே தூசுத்துணிக்கைகள் காணப்படும். ஆனால், தற்போது வீசும் புயல் காற்றில் 300 மைக்ரோ கிராம் அளவுக்கு அவை உள்ளன.

இது அபாயகரமான நிலைமை என்பதால் இந்தக் காற்றினை நேரடியாகச் சுவாசித்தால் மரணம் ஏற்படக்கூடும் என சீன அரசு எச்சரித்துள்ளது.

## எம்மை சீண்டினால் தூக்கத்தை இழப்பீர்கள் வடகொரிய அதிபரின் சகோதரி எச்சரிக்கை



அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு நன்றாக தூங்க வேண்டுமென விரும்பினால் தொடக்கத்திலிருந்தே தங்களை சீண்டாமல் இருப்பது நல்லது என அமெரிக்க அதிபர் பைடனுக்கு வடகொரிய அதிபரின் சகோதரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கநட்புநாடுகளுடன் இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், அணு ஆயுத ஆயுதங்கள் மற்றும் சீனாவுக்கு எதிராக அணி திரட்டவும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் தங்கள் நிலத்தில் துப்பாக்கி வாசனையை பரப்ப போராடும் அமெரிக்காவின் புதிய நிர்வாகத்திற்கு அறிவுறை என்று கூறி மிரட்டல் தொனியில் பேசியுள்ளார்.

## கொலம்பியாவில் புதிய பறவை கண்டுபிடிப்பு



கொலம்பியா நாட்டில் விகார தோற்றம் கொண்ட விநோத பறவை ஒன்று தென்பட்டுள்ளது.

சினோபோலா நகரைச் சேர்ந்த ஒரு பெண்மணி, தோட்டத்தின் வேலியில் பெரிய கண்கள் மற்றும் அகண்ட வாய் கொண்ட ஒரு பறவை அமர்ந்திருப்பதை பார்த்து அதை படம்பிடித்துள்ளார்.

பின்னர் அந்த பறவையானது, தென் அமெரிக்கா மற்றும் கொலம்பியாவில் வாழும் கிரேட் பொட்டூ (great potoo) எனப்படும் அரிய வகை பறவை என்பதும், பகலில் தூங்கி, இரவில் கண்விழித்து வாழும் பறவையினங்களை (Nocturnal birds) சேர்ந்தது என்பதும் தெரிய வந்தது.

## அஸ்ட்ராஜெனேகா தடுப்பு மருந்துக்கு மேலும் சில ஐரோப்பிய நாடுகளிலும் தடை



அஸ்ட்ராஜெனேகா தடுப்பு மருந்தினை மக்களுக்கு வழங்குவதை ஐரோப்பிய நாடுகள் சில தற்காலிகமாக நிறுத்தியுள்ளன. ஜேர்மனியும் அயர்லாந்தும் இந்த மருந்துக்கான தங்களது தற்காலிகத் தடை அறிவிப்பினை நேற்றைய தினம் விடுத்துள்ளன.

இந்த மருந்தைச் செலுத்தியவர்கள் இரத்தம் உறைதலுக்கு உள்ளாகிறார்கள் என்ற கருத்தினடிப்படையில் இந்த மருந்தினைச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்திய முதலாவது ஐரோப்பிய நாடாக டென்மார்க் உள்ளது. அதனையடுத்து நோர்வேயும் இந்த மருந்தின் பயன்பாட்டை நிறுத்த, இத்தாலி மற்றும் பிரான்ஸ் ஆகியனவும் இந்தப் பட்டியலில் இணைந்து கொண்டன. ஐரோப்பிய மருந்துகள் முகவரகத்தின் ஆய்வு முடிவுகளுக்காக தாம் காத்திருப்பதாக இந்த நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

உலக சுகாதார ஸ்தாபனமும் ஐரோப்பிய ஆணையகமும் அஸ்ட்ராஜெனேகாவால் பக்க விளைவுகள் ஏற்படவில்லை என தொடர்ந்தும் வலியுறுத்திவரும் நிலையில் மேலும் சில ஐரோப்பிய நாடுகளும் இதன் பாவனையை நிறுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தடுப்பு மருந்தைச் செலுத்தியவர்களின் இரத்தம் ஆங்காங்கே உறைவதால் அவர்களுக்கு மரணம் ஏற்படுவதாக எச்சரிக்கைக் குரல்கள் எழுந்துள்ளன. ஆயினும், இதன் உற்பத்தி நிறுவனமோ அதற்கான விஞ்ஞான பூர்வ ஆதாரங்கள் இல்லையென்று கூறியிருக்கிறது. அத்தோடு, தற்போது இரத்த உறைதலால் பாதிப்படைந்தவர்கள் பற்றி வெளியாகும் தரவுகள், இயல்பாகவே இந்தப் பிரச்சினையால் அபாயத்துக்கு உள்ளாகக் கூடிய மக்களது எண்ணிக்கையைவிட மிகச் சொற்பமாகும் என்றும் தெரிவிக்கிறது.

## அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிக்கு தற்காலிகமாகத் தடை




அஸ்ட்ராஜெனெகாவின் கொவிட் – 19 தடுப்பூசியை வெனிசுலா அங்கீகரிக்காது என அந்நாட்டின் துணை அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் (Delcy Rodriguez) தெரிவித்துள்ளார்.

ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி செலுத்தப்பட்டு டென்மார்க்கைச் சேர்ந்த ஒருவர் இரத்தம் உறைந்து உயிரிழந்தார்.

இதனையடுத்து நோர்வே, ஐஸ்லாந்து, ஆஸ்திரியா, இத்தாலி, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் அஸ்ட்ராஜெனெகா ஊசி போடுவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்தன.

இதனைத் தொடர்ந்து வெனிசுலாவும் இத்தடுப்பூசியை அங்கீகரிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளது.

# தமிழ்த் தேசிய அரசியலை குழிதோண்டி புதைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் விசனம்



அம்பாறை,மார்ச் 16

இறுதி யுத்தத்தின் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை குழிதோண்டி புதைக்கும்விதமாகதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நடவடிக்கை இருந்தது என என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், ஜெனிவா கூட்டத்தொடரில் சில நாடுகளினால் வரைபு ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தெரிவாகினர். அந்த வகையில் இவர்கள் சொல்வதைதான் உலகம் ஏற்கும்.

தற்போது அந்த வரைபிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் உடன்பட்டுள்ளார். இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் ஒரு பச்சதுரோகத்தையும் நயவஞ்சகத்தையும் கூட்டமைப்பின் தலைவர் செய்துள்ளார்.

தமிழ் மக்களாகிய நாங்கள் இனிமேலும் விழிக்காதுவிட்டால் எங்கள் தமிழ் மக்களை காப்பாற்றுவது கேள்விக்குறியாவிடும்.

இனியாவது தமிழ் சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டும். உண்மையான தலைவராகவும் நேர்மையான தலைவராகவும் யார் உள்ளார் என்பதை நாம் அறிய வேண்டும்.

இதனால்தான் 2010 ஆண்டளவில் அதில் இருந்து விலகி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் தமிழ் தேசிய அரசியலை தக்க வைத்து வந்துள்ளோம் என தெரிவித்தார்.

# தீவிரமைடைந்திருக்கும் போதைப்பொருள் வியாபாரம் கட்டுப்படுத்த கொழும்பிலிருந்து வரும் புலனாய்வுக்குழு

அம்பாறை ,மார்ச் 16

அம்பாறை மாவட்டத்தில் தீவிரமடைந்துள்ள போதைப்பொருள் வியாபாரத்தை கட்டுப்படுத்துவதற்கு கொழும்பில் இருந்து விசேட இராணுவ புலனாய்வுக் குழுவொன்றை களமிறக்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வந்துள்ளார் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது அம்பாறை, மாவடிப்பள்ளி அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் போதைப்பொருள் விற்பனையும் பாவனையும் கடுமையாக அதிகரித்திருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இது எமது மாணவர் சமூகம் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது. எமது மாவட்டத்தில் போதைப்பொருள் வியாபாரிகள் பெரிய வலையமைப்பில் இயங்கி வருகின்றனர்.

ஏனைய பகுதிகளில் பெரும்பான்மை சமூகத்திலுள்ள போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய முக்கிய புள்ளிகள் அதிரடியாக கைது செய்யப்படுகின்றபோது, எமது பகுதியில் மாத்திரம் இந்நடவடிக்கை மந்தமாக இருப்பது குறித்து சந்தேகப்பட வேண்டியுள்ளது. போதைப்பொருள் ஊடாக எமது சமூகத்தை சீரழித்து, நாசமாக்க விரும்புகின்ற சக்திகள் ஏதும் திட்டமிட்டு செயற்படுகின்றனவா என்கிற சந்தேகமும் எழுகிறது.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுடன் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலின்போது இவ்விடயத்தில் பாரதூரம் பற்றி அவரிடம் எடுத்துக்கூறினோம். போதைப்பொருள் வியாபாரத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நாடு முழுவதும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் அம்பாறை மாவட்டத்தில் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை என்றும் சுட்டிக்காட்டினோம்.

இதையடுத்து எதிர்வரும் நாளகளில் அம்பாறை மாவட்டத்தில் போதைப்பொருள் வியாபாரத்தை கட்டுப்படுத்துவதற்கு கொழும்பில் இருந்து விசேட இராணுவபுலனாய்வுக்குழுவொன்றை அனுப்புவதாகவும் அதற்கான பணிப்புரையை உடனடியாக விடுப்பதாகவும் ஜனாதிபதி எம்மிடம் உறுதியளித்திருக்கிறார்.என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கத்தோலிக்கப் பெண்ணின் உடல் ஓட்டமாவடியில் நல்லடக்கம்

ஓட்டமாவடி, சூடுபத்தினசேனை நல்லடக்கப் பிரதேசத்தில் முஸ்லிம்களின் ஜனாஸாக்களைத் தவிர்த்து, முதன் முறையாக கத்தோலிக்கப் பெண் ஒருவரின் சடலமும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இது நாட்டின் இன ஐக்கியத்துக்கும் மனிதாபிமான மரணித்து விடவில்லை என்பதற்கும் சிறந்தசான்றாக அமைந்திருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஜா - எலையைச் சேர்ந்த 60 வயதான அந்தப் பெண்மணி, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நிலையில் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி மார்ச் 08ஆம் திகதி மரணமடைந்தார்.

அவரின் உடல் கடந்த சனிக்கிழமை ஓட்டமாவடியில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டுவரும் சூடுபத்தின சேனை பிரதேசத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பல்வேறு பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளின் சவச்சாலைகளில் வைக்கப்பட்டிருந்த கொரோனா பூதவுடல்கள் 45 ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, கொவிட் - 19 னால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு இன, மத பேதமின்றி அனுமதி வழங்கப்படுமென, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# நிந்தவூரில் 7 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான கள்ள நோட்டுடன் மூவர் கைது



அக்கரைப்பற்று, மார்ச் 17

7 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான கள்ளநோட்டுக்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று வாழைச்சேனை இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அக்கரைப்பற்று பொலிஸாரினால் குறித்த மூவரும் கைதாகியுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்கள் நிந்தவூர் பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து இவ்வாறான சட்டவிரோத செயலில் ஈடுபட்டுள்ளனர்.

கைதாகிய குறித்த சந்தேக நபர்கள் தங்கிய வீட்டில் இருந்து பிறின்டர் மற்றும் கணினி உள்ளிட்ட 5,000 ரூபா நோட்டு பணம் அச்சிடும் தாள்கள், அச்சிடப்பட்ட பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்வாறு கைதான நபர்கள் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஒலுவில், பாலமுனை, கல்முனை ஆகிய பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்களே இவ்வாறு கைதானவர்களாவர்.

இதில் கைதான சந்தேக நபர் ஒருவர் கடந்த 6 மாதங்களுக்கு முன்னரும் கள்ள நோட்டுக்களை அச்சடித்து விநியோகித்த குற்றச்சாட்டில் கைதாகி விடுதலையானவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

# நகரத்தில் 17 தொற்றாளர்களால் திருகோணமலை வெறிச்சோடியது

திருகோணமலை,மார்ச் 16

திருகோணமலை நகர பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வட்டார எல்லைக்குள் உட்பட்ட மூன்று வீதிகளில் கடந்த 4 நாள்களில் கொரேனா வைரஸ் தொற்றாளர்கள் 17 பேர் உறுதி செய்யப்பட்டனர் என நகர பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால், குறித்த பகுதிகளில் உள்ள 179 கடைகள், நேற்றும் இன்றும் மூடப்பட்டுள்ளதுடன், அக்கடைகளில் பணிபுரியும் 343 பேருக்கு, என்.சி. வீதியில் உள்ள பள்ளிவாசலில் நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் நகர பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்தது.

சனிக்கிழமை எழுந்தமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 19 கடைகளைச் சேர்ந்த 17 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று இருப்பது தெரியவந்துள்ளதை அடுத்து, கடைகளை தற்காலிகமாக மூடுமாறு சுகாதாரப் பிரிவினரால் கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து மேற்படி கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ள அபாயத்தினைக் குறைப்பதற்காக புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆராய்வு

மட்டக்களப்பு ,மார்ச் 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்படுகின்ற வெள்ள அபாயத்தினைக் குறைப்பதற்காக நீர் முகாமைத்துவத்தினை மேற்கொண்டு அவ் வெள்ள நீரினை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கான புதிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் மஹாவலி,விவசாயம்,நீர்ப்பாசனம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் கீழ் காலநிலை பின்னடைவு மேம்பாட்டு திட்டம் எனும் அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

இம் மாவட்டத்தில் வெள்ள அபாயத்தினைக் குறைப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான சாத்தியக்கூறுகளை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நேற்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது வெள்ள அனர்த்தத்தினை குறைப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது கவனிக்கப்படவேண்டிய பொருளாதாரம், சூழல், வாழ்வாதாரம், சமூகம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற பிரதான விடயங்களும் அவற்றுக்கிடையிலான உபவிடயங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டு தொழில்நுட்பப் பிரிவினருக்கும் சம்பந்தப்பட்ட திணைக்கள பங்குதாரர்களுக்குமிடையே கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு வாவி கடலுடன் கலக்கும் கல்லாறு மற்றும் டச்பார் முகத்துவாரங்களின் அபிவிருத்தி, சந்திவெளி பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள புதிய கால்வாய், கிரானில் அமைக்கப்படவுள்ள புதிய பாலம், சித்தாண்டி மற்றும் ஏ – 5 தொடக்கம் ஏ – 15 பிரதான பாதைகளிலும், தாழ் நிலப்பகுதிகளிலும் அமைக்கப்படவுள்ள நீர் அணை மதில்கள் மற்றும் மகிழவட்டவான் நீர்த்தேக்கம் என்பன இதில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிக ஓவர்களை வீசி ரஷீட் கான் சாதனை

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் சுழல்பந்து வீச்சாளரான ரஷீட் கான் 21ஆம் நூற்றாண்டில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியொன்றில் அதிக ஓவர்களை வீசிய பந்துவீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார்.

சிம்பாப்வே அணிக்கெதிராக அபுதாபியில் விளையாடிய இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவர் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார். முதலாவது இன்னிங்ஸ்ஸில் 38.3 ஓவர்கள், இரண்டாம் இன்னிங்ஸ்ஸில் 62.5 ஓவர்களை வீசிய இவர் அவுஸ்திரேலிய அணியின் புகழ்பெற்ற பந்துவீச்சாளரான ஷேன் வோர்னின் சாதனையை முறியடித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டில் தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் 98 ஓவர்களை ஷேன் வோர்ன் வீசியதே 21ஆம் நூற்றாண்டின் சாதனையாக




இருந்துவந்தது. இந்தச் சாதனையை 99.2 ஓவர்களை வீசிய ரஷீட் கான் கடந்திருக்கிறார். இரண்டு இன்னிங்ஸ்களிலுமாக 11 விக்கெட்டுக்களை வீழ்த்திய இவர், இரண்டாவது இன்னிங்ஸ்ஸில் 7 விக்கெட்டுக்களைகைப்பற்றியதோடு 17 ஓட்டமற்ற ஓவர்களையும் வீசி சிம்பாப்வே அணிக்கு கடும் அழுத்தத்தைக் கொடுத்து ஆப்கானிஸ்தான் அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

ரஷீட் கான் மற்றும் ஷேன் வோர்னுக்கு அடுத்ததாக 21ஆம் நூற்றாண்டில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியொன்றில் அதிக ஓவர்களை வீசிய பந்துவீச்சாளராக முரளிதரன் உள்ளார். 2001ஆம் வருடத்தில் இங்கிலாந்துக்கெதிரான போட்டியில் 97 ஓவர்களை இவர் வீசியிருந்தார்.

அதேவேளை, இங்கிலாந்து அணிக்கெதிராக 1998 இல் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 113.5 ஓவர்களை வீசிய முரளிதரனின் பந்துவீச்சு நவீன டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் போட்டியொன்றில் வீரரொருவரால் வீசப்பட்ட அதிகபட்ச ஓவர்கள் என்ற முறியடிக்கப்படாத சாதனையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இந்திய -இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றவது இருபதுக்கு இருபது கிரிக்கெட்ப் போட்டி இன்று அஹமதாபாத்தில் இலங்கை, இந்திய நேரப்படி இரவு 7 மணியளவில் இந்தப் போட்டி ஆரம்பமாகும்.**




# இந்திய அணிக்கு அபராதம்

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு இருபது போட்டியில் பந்துவீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதற்காக இந்திய கிரிக்கெட் அணிக்கு போட்டி ஊதியத்தில் இருந்து 20 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது இருபதுக்கு இருபது போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் இந்திய அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்த போட்டியில் வழங்கப்பட்ட நேரத்துக்குள் இந்திய அணி ஒரு ஓவர் குறைவாக வீசியதையடுத்து கள நடுவர்கள் போட்டி மத்தியஸ்தரிடம் அது குறித்து அறிக்கையிட்டனர்.

போட்டியின் பின்னர் நடத்தப்பட்ட விசாரணையில் இந்திய அணித்தலைவர் விராட் கோலி தவறை ஒப்புக்கொண்டதையடுத்து அபராதத்தோடு மட்டும் தண்டனையை முடித்துக் கொள்வதாக போட்டி மத்தியஸ்தர் அறிவித்துள்ளார்.

# உலக டென்னிஸ் தரவரிசை 2ஆவது இடத்தில் மெட்வெடேவ்

உலக டென்னிஸ் ஒற்றையர் தரவரிசையில் ரஷ்ய வீரர் டானில் மெட்வெடேவ் ஸ்பெயினின் ரபெல் நடாலை பின் தள்ளி முதல்முறையாக 2 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

உலக டென்னிஸ் ஒற்றையர் தரவரிசையில் 15 ஆண்டுகளாக ரோஜர் பெடரர், ரபெல் நடால், நோவக் ஜோகோவிச், அன்டி மரே ஆகிய வீரர்களே ஆதிக்கம் செலுத்திவந்துள்ளார்கள். இந்த நான்கு வீரர்களுமே தரவரிசையின் முதலிரு இடங்களையும் கைப்பற்றி வந்தனர்.



இறுதியாக 2005 இல் சில தினங்கள் மட்டுடும் அவுஸ்திரேலிய வீரரான லெய்டன் ஹெவிட் தரவரிசையின் இரண்டாமிடத்தை வகித்தார். அதன் பின்னர் குறித்த நான்கு வீரர்களுமே முதலிரு இடங்களையும் தமக்குள் பகிர்ந்துவந்தனர். இந்த மூத்த வீரர்களின் ஆதிக்கத்தை 25 வயதேயான ரஷ்ய வீரர் டானில் மெட்வெடேவ் அசைத்துப் பார்த்திருக்கிறார். உலக டென்னிஸ் வீர வீராங்கனைகளின் புதிய தரவரிசைப் பட்டியல் நேற்று வெளியானபோது விளையாட்டு உலகமே ஆச்சரியத்தில் மூழ்கியது.

ஒற்றையர் தரவரிசையில் 9,940 புள்ளிகளோடு மூன்றாவது இடத்திலிருந்த டேனில்மெட்விடேவ்கடந்தவாரம்பிரான்ஸில் நடந்த சர்வதேச டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றதன் மூலம் ஒரு இடம் முன்னேறி முதல்முறையாக இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளார்.

இரண்டாவது இடத்தில் இருந்த 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற 34 வயது ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் மூன்றாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டார். முதலிடத்தில் ஜோகோவிச் 12,008 புள்ளிகள் புள்ளிகளோடு தொடர்கிறார். கடந்த ஆண்டு நடந்த உலக தொடர் இறுதிச் சுற்று போட்டியில் ஜோகோவிச், ரபெல் நடால் போன்றோரையெல்லாம் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்று அசத்திய மெட்விடேவ், இதுவரை கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தை வென்றதில்லை என்பது கவனிக்கத்தக்கது.

# பேலேவின் சாதனையை முறியடித்த ரொனால்டோ

உலகக் கால்பந்தாட்ட நட்சத்திரமான பேலேவின் 767 கோல்கள் அடித்த சாதனையை கிறிஸ்டியானோ ரொனால்டோ முறியடித்துள்ளார். இவருக்கு பேலே தனது நெகிழ்ச்சியான வாழ்த்துகளை உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கின் மூலம் தெரிவித்துள்ளார்.

'சீரிஸ் ஏ' தொடரில் ஜுவென்டஸ் அணிக்காக விளையாடிவரும் ரொனால்டோ, காலிரி அணிக்கெதிராக அடித்த 3 கோல்களோடு அதிகாரபூர்வமாக 770 கோல்களை அடித்தவரானார்.

இந்தச் சாதனையின் மகிழ்ச்சியை தனது இன்ஸ்டகிராம் பக்கத்தில் பகிர்ந்த ரொனால்டோ 'பேலே என்ற அற்புத வீரரின் சாதனைக் கதைகளைக் கேட்காது வளர்ந்த கால்பந்தாட்ட வீரர்கள் எவரும் இந்த உலகில் இருக்கமுடியாது நானும் அதற்கு விதிவிலக்கல்ல. அவரது சாதனையைக் கடப்பது என்பது நான் கனவிலும் நினைத்திராத ஒன்று' என்று குறிப்பிட்டிருந்தார்.



அவருக்கு தனது வாழ்த்துகளை டுவிட்டரில் தெரிவித்த பேலே, ரொனால்டோவை கட்டியணைத்து வாழ்த்துகளைத் தெரிவிக்க முடியாததே தனது தற்போதைய கவலை என்று தெரிவித்திருந்தார். அந்த வருத்தத்தைப் போக்கும் விதமாக இருவரும் இருக்கும் புகைப்படமொன்றைப் பதிவிடுவதாகக்கூறி அதனைப் பகிர்ந்துள்ளார்.

மூன்று முறை பிரேசிலுக்காக உலகக் கிண்ணத்தை வென்றுகொடுத்த பேலே அதிகார பூர்வமாக 767 கோல்களை அடித்திருந்தாலும் உத்தி யோகப்பற்றற்ற போட்டிகளையும் சேர்த்து இவரது மொத்தக் கோல்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் மேலாகும்.

ரொனால்டோ கழகப் போட்டிகளில் 668 கோல்களை அடித்துள்ளார். இவற்றில் 5 ஸ்போர்ட்டிங் லிஸ்பன் அணிக்காகவும் 118 மன்செஸ்டர், 450 ரியல் மட்ரிட், 95 ஜுவான்டஸ் கழக அணிகளுக்காகவும் அடிக்கப்பட்டவை. தனது தேசிய அணியான போர்த்துக்கல்லுக்காக இவர் 102 கோல்களை அடித்திருக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிய வேண்டிய ஜனாதிபதி கிராமங்களுக்கு சென்று தனது பிரச்சினைகளை கூறுகின்றார்!

## ஹரின் கிண்டல்



நாட்டைப் பாதுகாப்பதாகக் கூறி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய ஜனாதிபதியிடமிருந்து தற்போது நாட்டைப் பாதுகாக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிய வேண்டிய ஜனாதிபதி ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று, தனது பிரச்சினைகளை மக்களிடம் கூறுகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை கொழும்பு ஹைட்பார்க்கில் மக்கள் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஹரின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

நாட்டைப் பாதுகாப்பதாகக் கூறி ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிய ஜனாதிபதியிடமிருந்து தற்போது நாட்டைப் பாதுகாக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிய வேண்டிய ஜனாதிபதி ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று, தனது பிரச்சினைகளை மக்களிடம் கூறுகின்றார்.

இவை ஜனாதிபதியின் செயற்பாடுகளும் கொள்கைகளும் தோல்வியடைந்திருப்பதையே பிரதிபலிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி அதன் கொள்கைகளுக்கு முரணாக செயற்பட்டமையால் நாட்டுமக்கள் அதனைப் புறக்கணித்தார்கள்.

அதன் விளைவாகவே நாங்கள் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் சக்தியை ஸ்தாபித்தோம்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய தேசிய ரீதியான தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும்.

ஆட்சி மாறினாலும் காட்சி மாறாது என்பார்கள். தற்போதைய அரசாங்கத்தின் தன்மையும் இவ்வாறானதாகக் காணப்படுகிறது.

செல்வந்தர்களுக்கு சார்பாகவே அரசாங்கம் செயற்படுகிறது. நடுத்தர மக்கள் குறித்து அக்கறை காண்பிப்பதாகத் தெரியவில்லை.

நாட்டைப் பாதுகாப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்திடமிருந்து இன்று நாட்டைப் பாதுகாக்க வேண்டியுள்ளது.

பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளும் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளன.

இந்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

# சீனி இறக்குமதியால் ஏற்பட்ட நட்டத்தை பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## ஐ.தே.க. வலியுறுத்தல்



சீனி இறக்குமதியால் ஏற்பட்டுள்ள 1,500 கோடி ரூபா நஷ்டத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று சதொச நிறுவனம் கூடிய விலைக்கு சீனியை பெற்றுக் கொண்டு குறைந்த விலைக்கு விற்பனை செய்துள்ளது.

இதுதொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசாங்கம் கடந்த வருடம் ஒக்ரோபர் 13ஆம் திகதி இறக்குமதி செய்யப்படும் சீனிக்கான வரியை 50 ரூபாவில் இருந்து ரூபா 25சதம் வரை குறைப்பதாக வர்த்தமானி அறிவிப்பு வெளியிட்டிருந்தது.

மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவித்தே இந்த வரி குறைப்பை மேற்கொண்டது. கடந்த பெப்ரவரி 14ஆம் திகதிவரை இந்த வரிகுறைப்பு நடைமுறையில் இருந்தது.

அத்துடன் சீனிக்கான வரிகுறைப்பின் மூலம் ஒரு கிலோ சீனியை 85 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ளலாம் என்றே அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனால் மக்களுக்கு அந்த நிவாரணம் கிடைக்கவில்லை. என்றாலும் வரிகுறைப்பினால் அரசாங்கத்துக்கு கிடைத்துவந்த இலாபம் இல்லாமலாகியதால் 1,500 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சு நாடாளுமன்ற பொது மக்கள் நிதிக் குழுவுக்கு அறிவித்துள்ளது.

மேலும் சீனி வரிக் குறைப்பின் நன்மை அரசாங்கத்துக்கு தேவையான சில வியாபாரிகளுக்கே சென்றிருக்கின்றது. வரிகுறைப்பு இடம்பெற்ற காலப்பகுதியில் குறித்த ஒரு நிறுவனம் மாத்திரம் கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம் 26 ஆயிரம் மெற்றிக் தொன் சீனி இறக்குமதி செய்திருக்கின்றது.

ஆனால் இந்த நிறுவனம் அரசாங்கம் அறிவித்த 85 ரூபாவுக்கு நுகர்வோருக்கு சீனியை பெற்றுக் கொள்ளத் தேவையான முறையில் விநியோகிக்காமல் அதனை பதுக்கி வைத்திருந்து, கூடிய விலைக்கே விநியோகித்துள்ளது.

அத்துடன் சதொச நிறுவனம் கடந்த ஒக்ரோபர் 13ஆம் திகதி ஒரு கிலோ சீனி 127.49சதம் அடிப்படையில் 700 மெற்றிக் தொன் பெற்றுக் கொண்டு 85 ரூபாவுக்கு விற்பனை செய்திருக்கின்றது.

அதேபோன்று 121 ரூபா, 92 ரூபா, 110 ரூபா என்ற அடிப்படையில் சதொச ஒக்ரோபர் மாதம் சீனி கொள்வனவு செய்து 85 ரூபாவுக்கே விற்பனை செய்திருக்கின்றது. இவ்வாறு கூடிய விலைக்கு பெற்றுக்கொண்டு குறைந்த விலைக்கு சீனி விற்பனை செய்திருப்பதன் மூலமும் மக்களின் பணமே விரயமாகி இருக்கின்றது.

அதனால் சதொச நிறுவனம் 85 ரூபாவுக்கு சீனியை யாருக்கு அதிகம் விற்பனை செய்தது என்பது தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

வரிகுறைப்பால் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நஷ்டத்தை அரசாங்கம் பொது மக்களிடமிருந்து அறவிடாமல், இதன் மூலம் இலாபம் பெற்றவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார்.

# கெசல்வத்த தினுக துபாயில் உயிரிழப்பு!



பிரபல பாதாள உலகத் தலைவனும், போதைப் பொருள் கடத்தல் காரருமான கெசல்வத்த தினுக எனும் ஆர்.ஏ.தினுக மதுஷான் டுபாயில் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுட்டுக்கொலை செய்தல், அச்சுறுத்தி கப்பம் பெறுதல், போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் விபச்சாரம் உள்ளிட்ட பாதாள உலகத்துடன் தொடர்புபட்ட பல திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் கெசல்வத்த தினுக பின்னணியில் செயற்பட்டிருந்தார் என நம்பப்படும் நிலையில் அவர் பொலிஸாருக்கு அவசியமான சந்தேக நபராக விளங்கினார்.

இந் நிலையிலேயே அவர் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் டுபாய்க்கு தப்பிச் சென்றிருந்த நிலையில் அவர் தங்கியிருந்த வீட்டில் கடந்த இரு நாள்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார் என உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

தினுக உயிரிழந்துள்ளதாக தகவல்கள் கசிந்த நிலையில், வாழைத்தோட்டம் பொலிஸ் நிலைய அதிகார எல்லைக்கு உட்பட்ட, திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் பொலிஸ் பிரிவுக்கு அருகே உள்ள கெசல்வத்த தினுகவின் வீட்டில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

தனது மகனின் சடலத்தை, உரிய பி.சி.ஆர். பரிசோதனைகளின் பின்னர் நாட்டுக்கு எடுத்துவர தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கெசல்வத்த தினுகவின் தாயார் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தினுகவின் உயிரிழப்பு தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹணவிடம் வினவிய போது, அது தொடர்பாக உத்தியோகபூர்வமான அறிவிப்பு பொலிஸ் திணைக்களத்துக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சர்வதேச பொலிஸ் பிரிவுக் கிளை ஊடாக தொடர்பாடல்களை முன்னெடுத்து அவ்தகவலை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

# அம்பாறையில் 6 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா செய்கை அழிப்பு

அம்பாறை,மார்ச் 16

அம்பாறை பக்மிடியாவ பகுதியில் 6 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா செய்கை கிழக்கு பாதுகாப்பு படை தலைமையகத்தின் கீழ் உள்ள இலங்கை இராணுவத்தின்முதலாவதுகொமாண்டோ படைப்பிரிவு வீரர்களினால் நேற்று முன்தினம் சோதனையிடப்பட்டது.



கஞ்சா செய்கை குறித்து கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய பொலிஸாருடன் இணைந்து இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.03.2021இல் வெளியிடப்பெற்றது.